செ.வெ.எண்: 08 நாள்: 04.09.2021

# பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தரமான அரிசி வழங்கிடும் பொருட்டு நடப்பு கொள்முதல் பருவம் 2020-2021 கொள்முதல் செய்யப்பட்ட நெல்லினை கழக நவீன அரிசி ஆலைகள் மற்றும் கழகத்தில் அரவை முகவர்களாக செயல்பட்டு வரும் தனியார் அரவை ஆலைகள் மூலம் அரவை செய்து தரமான அரிசியை பொது விநியோக திட்டத்திற்கு வழங்கி வருகிறது.

மண்டலங்களில் கூடுதலாக இருப்பில் உள்ள நெல்லினை கழகத்தில் இணையாத தனியார் புழுங்கல் அரிசி அரவை ஆலைகள் மூலம் கழக நிபந்தனைகளுக்கு உட்பட்டு "ஒருமுறை திட்டத்தின்" கீழ் 15.09.2021 முதல் 15.11.2021 வரை அரவை செய்து கண்டு முதல் அரிசியினை கிடங்கில் ஒப்படைப்பு செய்திட ஏதுவாக தனியார் புழுங்கல் அரிசி அரவை ஆலை உரிமையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 03.09.2021 முதல் வரவேற்கப்படுகிறது. இத்திட்டத்தில் இணைய விரும்பும் அரிசி ஆலை உரிமையாளர்கள் தரமான அரிசியை அரவை செய்து வழங்க ஏதுவாக தங்கள் அரிசி ஆலைகளில் கலர் சார்ட்டர் உள்ளிட்ட நவீன அரவை கட்டமைப்பு வசதிகள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். மேலும் கூடுதல் விவரங்களுக்கு முதுநிலை மண்டல மேலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நாகப்பட்டினம் மண்டல அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் (தொடர்புக்கு அலுவலக தொலைபேசி எண்: 04365-251393.) என மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.